2019 ஜூலை 11] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தற்போது எஞ்சியுள்ள தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கடலூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களிலுள்ள 6 அரசு கூர்நோக்கு இல்லங்களை அவற்றுடன் தொடர்புடைய 16 மாவட்டங்களிலுள்ள இளைஞர் நீதிக் குழுமங்களுடன் காணொலிக் காட்சிமூலம் இணைக்கும் பணிகள் எல்காட் நிறுவனம்மூலம் 2.6 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) மாற்றுத் திறனாளிகள் உதவியாளரை வைத்துக்கொள்ள மாதாந்திர பராமரிப்புத் தொகையை உயர்த்தி வழங்குதல், ஆவின் பால் நிறுவனம் நடத்தும் மாற்றுத் திறனாளிகள் பால் பொருட்களை வாங்க மானியம் வழங்குதல் தொடர்பான மாற்றுத் திறனாளிகள் நலத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன வளர்ச்சி குன்றியோர், கடுமையாக தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகையாக மாதம் 1,500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அதிக உதவி தேவைப்படும் (High Support need) 800 மாற்றுத் திறனாளிகள் தங்களுடன் ஓர் உதவியாளரை வைத்துக்கொள்ள ஏதுவாக, அவர்களுக்கு மாதாந்திர பராமரிப்புத் தொகையுடன் கூடுதலாக 1,000 ரூபாய் உதவித் தொகை நடப்பு நிதியாண்டில் 96 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தமிழ்நாட்டில் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பகல் நேர பராமரிப்பு மையங்கள் 4 மாவட்டங்களில் அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. தற்போது கூடுதலாக 10 மாவட்டங்களில் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உபகரணங்களுடன்கூடிய பகல் நேர பராமரிப்பு மையங்கள் 2.65 கோடி ரூபாய் செலவில் இந்த நிதியாண்டில் தொடங்கப்படும். இதன்மூலம், 250 தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் பயன்பெறுவர். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மாற்றுத் திறனாளிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன்கூடிய பல்வேறு சுய வேலைவாய்ப்புத்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 11

திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. 2018-2019 ஆம் நிதியாண்டில் ஆவின் பால் பொருட்கள் விற்பனை மையம் அமைக்க, 100 மாற்றுத் திறனாளிகளுக்கு, அவர்கள் செலுத்த வேண்டிய முன்பணத் தொகை 25,000 ரூபாயை தமிழ்நாடு அரசே செலுத்திடும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டம் மாற்றுத் திறனாளிகளிடம் அதிக வரவேற்பு பெற்றதால், ஆவின் நிறுவனத்திற்கு பயனாளிகள் செலுத்த வேண்டிய முன்பணத் தொகை 25,000 ரூபாயுடன், ஆவின் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு பயனாளிகளுக்கு மானியமாக 25,000 ரூபாய் என மொத்தம் ஒரு பயனாளிக்கு 50,000 ரூபாய் வீதம் 200 பயனாளிகள் பயனடையும் வகையில், நடப்பாண்டில் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைக் கூறி, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

4. விதி 110-ன்கீழ் அறிக்கை அளித்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆஸ்டின், என்ன point of order? (குறுக்கீடு) இருங்கள், என்ன point of order? (குறுக்கீடு)

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றி ** (குறுக்கீடு)

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை (குறுக்கீடு) இருங்கள் (குறுக்கீடு) திரு. ஆஸ்டின், இருங்கள். (குறுக்கீடு) ஒரு பொருள் அல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விதி 110-ன்கீழ் அறிக்கை அளிப்பதற்கு உரிமை இருக்கிறது. அந்த அடிப்படையில் அவர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் குறித்து . . . (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் நீங்கள் நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லலாம், விவாதம் கூடாது. திரு. ஆஸ்டின், நீங்கள் பேசியது அனைத்தும் அவைக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.